மோட்டார் வாகன விபத்து கோரிக்கைத் தீர்ப்பாயம், கடலூர்

சிறப்பு மாவட்ட நீதிமன்றம் எண்.1, கடலூர்

முன்னிலை : - திரு.V.ஆனந்தன் எம்.காம்., பி.எல்.,
மோட்டார் வாகன விபத்துக்கள் கோரிக்கைத் தீர்ப்பாயர்,
சிறப்பு மாவட்ட நீதிபதி எண்.1, கடலூர்.

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ஆம் நாள் செவ்வாய் கிழமை

திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் ஐப்பசி திங்கள் 25ம் நாள்

எம்.சி.ஓ.பி.எண்கள்.1197/2023 மற்றும் 1196/2023

மோ.வா.வி.கோ.ம.எண்.1197/2023

K. ஸ்ரீநிவாசன் (வயது 23)
த/பெ. கண்ணன் ... மனுதாரர்

/ எதிர் /

1. Kapoor Diesels Garage Pvt. Ltd.,
   (rep by its Proprietor), New Delhi.
2. கோட்ட மேலாளர்,
   தி நியூ இந்தியா அஷ்யுரென்ஸ் கம்பெனி லிமிடெட்.,
   கடலூர். ... எதிர்மனுதாரர்கள்

மோ.வா.வி.கோ.ம.எண்.1196/2023

R. வீர சஞ்சீவி (வயது 19)
த/பெ. ரகுபதி ... மனுதாரர்

/ எதிர் /

1. Kapoor Diesels Garage Pvt. Ltd.,
   (rep by its Proprietor), New Delhi.
2. கோட்ட மேலாளர்,
   தி நியூ இந்தியா அஷ்யுரென்ஸ் கம்பெனி லிமிடெட்.,
   கடலூர். ... எதிர்மனுதாரர்கள்

* * * * *

மேற்கண்ட மனுக்களில் கூறப்பட்ட விபத்துக்கள் ஒரே விபத்து என்பதால் இரண்டு மனுக்களையும் சேர்த்து நடத்த வேண்டுமென குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மேற்படி மனுக்கள் 03.11.2025 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இரண்டு மனுக்களிலும் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சிவமணி அவர்கள் முன்னிலையாகியும், இரண்டு மனுக்களிலும் 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சங்கர்ராமன் அவர்கள் முன்னிலையாகியும், இரண்டு மனுக்களிலும் 1-ம் எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை சார்வு செய்ய இயலாததினால் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தும், 1-ம் எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததினால் ஒருதலைபட்சமாக பாவிக்கப்பட்டும், இவ்வழக்குகளில் இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இந்த மனுக்களில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் ...

பொதுவான உத்தரவு

மோ.வா.வி.கோ.ம.எண்.1197/2023

கடந்த 15.05.2023-ம் தேதியன்று நடந்த சாலை விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களுக்கு இழப்பீடாக ரூ.30,00,000/- (ரூபாய் முப்பது லட்சம் மட்டும்) எதிர்மனுதாரர்களிடமிருந்து கேட்டு மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166(1)-ன் கீழ் இந்த மனு மனுதாரரால் கொண்டு வரப்பட்டுள்ளது.

மோ.வா.வி.கோ.ம.எண்.1196/2023

கடந்த 15.05.2023-ம் தேதியன்று நடந்த சாலை விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுங்காயங்களுக்கு இழப்பீடாக ரூ.30,00,000/- (ரூபாய் முப்பது லட்சம் மட்டும்) எதிர்மனுதாரர்களிடமிருந்து கேட்டு மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166(1)-ன் கீழ் இந்த மனு மனுதாரரால் கொண்டு வரப்பட்டுள்ளது.

2. மோ.வா.வி.கோ.ம.எண்கள்.1197/2023 மற்றும் 1196/2023 மனுக்களின் சுருக்கம்

கடந்த 15.05.2023 அன்று இரவு சுமார் 10.20 மணியளவில் மனுதாரர்களான ஸ்ரீநிவாசன் மற்றும் வீர சஞ்சீவி ஆகியோர்கள் PY-01-CD-4015 என்ற என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை ஸ்ரீநிவாசன் என்பவர் ஓட்டிக் கொண்டும் பின்னால் வீர சிரஞ்சீவி என்பவரை உட்கார வைத்துக் கொண்டு, கடலூரிலிருந்து - கடலூர் OT மெயின் ரோட்டில், செல்லங்குப்பம் வெள்ளி பிள்ளையார் கோயில் அருகே, வடக்கிலிருந்து தெற்கு நோக்கி, இடதுபுற ஓரமாக ஓட்டிச் சென்றுக் கொண்டிருந்த போது, அவர்களுக்கு எதிர்திசையில் வந்த 1-ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானதும், 2-ம் எதிர்மனுதாரர் வசம் காப்பீடு செய்யப்பட்டதுமான NL-01-L-5121 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர்கள் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தி விட்டார் என்றும், இவ்விபத்தில் எம்.சி.ஓ.பி.1197/2023 என்ற வழக்கின் மனுதாரரான ஸ்ரீநிவாசன் என்பவருக்கு வலது கால் இரண்டு எலும்புகளிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு, கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் 15.05.2023 முதல் 16.05.2023 வரை சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றும், பின்னர் காயத்தின் தன்மையினை கருதி மேல்சிகிச்சைக்காக கடலூர் Be well மருத்துவமனையில் 16.05.2023 முதல் 21.05.2023 வரை உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றும், மேற்படி மருத்துவமனையில் மனுதாரரின் வலது கால் இரண்டு எலும்புகளிலும் ஏற்பட்ட எலும்பு முறிவிற்காக Wound Debridement செய்தும், வெளிப்புற கம்பி பொருத்தியும் அறுவை சிகிச்சை செய்து சிகிச்சை அளிக்கப்பட்டது என்றும், பின்னர் மீண்டும் கடலூர் Be Well மருத்துவமனையில் உள்நோயாளியாக 07.06.2023 முதல் 09.06.2023 வரை சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றும், மேற்படி மருத்துவமனையில் மனுதாரரின் வலது கால் இரண்டு எலும்புகளிலும் பொருத்தப்பட்ட வெளிப்புற கம்பி அறுவை சிகிச்சை மூலம் நீக்கம் செய்து சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் வலது கால் இரண்டு எலும்புகளிலும் தகடு

மற்றும் திருகாணிகள் பொருத்தி அறுவை சிகிச்சை செய்து சிகிச்சை அளிக்கப்பட்டது என்றும், மேற்படி விபத்து சமயத்தில் ஸ்ரீநிவாசன் என்ற மனுதாரருக்கு வயது 23 என்றும், அவர் மீன்பிடி தொழில் செய்து மாதம் ரூ.30,000/- சம்பாதித்து வந்தார் என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்விபத்தில் எம்.சி.ஓ.பி.1196/2023 என்ற வழக்கின் மனுதாரரான வீரசஞ்சீவி என்பவருக்கு, வலது கால் தொடை எலும்பின் மேல் பகுதியில் எலும்பு முறிவு ஏற்பட்டு, கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் 15.05.2023 முதல் 16.05.2023 வரையிலும் சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றும், பின்னர் காயத்தின் தன்மை கருதி மேல்சிகிச்சைக்காக Be Well மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றும், மேற்படி மருத்துவமனையில் மனுதாரரின் வலது கால் தொடையில் ஏற்பட்ட எலும்பு முறிவிற்காக ராடு மற்றும் திருகாணிகள் பொருத்தி அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றும், மேற்படி விபத்து சமயத்தில் வீரசிரஞ்சீவி என்பவருக்கு வயது 16 என்றும், அவர் மீன்பிடி தொழில் செய்து மாதம் ரூ.20,000/- சம்பாதித்து வந்தார் என்றும் கூறப்பட்டுள்ளது. இவ்விபத்திற்கு 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவு தான் காரணம் என்பதினாலும், 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் 2-ம் எதிர்மனுதாரர் வசம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதினாலும் மனுதாரர்களுக்கான இழப்பீட்டு தொகையை எதிர்மனுதாரர்கள் கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ கொடுக்க கடமைப்பட்டுள்ளார்கள் என இம்மனுக்கள் மனுதாரர்களால் கொண்டுவரப்பட்டுள்ளது.

3. மோ.வா.வி.கோ.ம.எண்கள்.1197/2023 மற்றும் 1196/2023-க்கான 2-ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரைகளின் சுருக்கம் :-

மனுதாரர்களின் மனு தேவையற்றது மற்றும் நியாயமற்றது என்பதினால் எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியது என்றும், மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகளில் நேரடியாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர்த்து இதர சங்கதிகள் மறுக்கப்படுகிறது என்றும், விபத்து சமயத்தில் 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் இந்த எதிர்மனுதாரர் வசம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், அந்த வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு முறையான

ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பதும் மறுக்கப்படுகிறது என்றும், அந்த வாகனத்திற்கு அனுமதிச் சான்று, பதிவுச் சான்று இருந்தது என்பதும் மறுக்கப்படுகிறது என்றும், 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் விபத்து நிகழ்ந்தது என்பது மறுக்கப்படுகிறது என்றும், இந்த மனுதாரர்களில் ஒருவரான ஸ்ரீநிவாசன் என்பவரே மோட்டார் இருசக்கர வாகனத்தினை பின்னால் ஒருவரை உட்கார வைத்துக் கொண்டு அதிவேகமகாவும், கவனக்குறைவாகவும் ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் ஓட்டிச் சென்று 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தி விட்டார் என்றும், 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் சிறந்த முயற்சி எடுத்தும் விபத்தினை தவிர்க்க இயலவில்லை என்றும், மனுதாரர்களே தவறிழைத்தவர் என்பவதினால் இந்த எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்றும், மனுதாரர்களின் வயது, வருமானம் மற்றும் தொழில் ஆகியவற்றினை இந்த மனுதாரர்கள் நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார் என்றும், விபத்தினால் இந்த மனுதாரர்களுக்கு காயம் ஏற்பட்டு அதனால் அவர்கள் சிகிச்சை எடுத்துக் கொண்டார்கள் என்பதினையும், அதனால் அவர்களுக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டது என்பதினையும் இந்த மனுதாரர்கள் உரிய ஆவணங்களைக் கொண்டு நிரூபிக்க வேண்டுமென்றும், கோரப்பட்டுள்ள இழப்பீட்டு தொகை மிகவும் அதிகபட்சம் என்றும், எனவே மனுவினை தள்ளுபடி செய்யவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

4. மோ.வா.வி.கோ.ம.எண்கள்.1197/2023 மற்றும் 1196/2023-க்கான மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் :-

1. வழக்கு விபத்தானது 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் நிகழ்ந்தது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதா?
2. மனுதாரரர்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதா? அவ்வாறேனில் எவ்வளவு?
3. இழப்பீட்டு தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் யார் ?

2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 170-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு அனுமதிக்கப்பட்டது.

5. இம்மனுக்களில் மனுதாரர் தரப்பில் ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மனுதாரர் தரப்பில் ம.சா.1-ன் மூலம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களும், மனுதாரர் தரப்பில் ம.சா.2-ன் மூலம் ம.சா.ஆ.10 முதல் ம.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் உரிய சாட்சி யாரும் விசாரிக்கப்படவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. மோ.வா.வி.கோ.ம.எண்கள்.1197/2023 மற்றும் 1196/2023 பிரச்சனை எண்.1 க்கான தீர்வு :-

மனுதாரர்களின் மனுவிற்கு 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித எதிர்வாதமும் எடுத்து வைக்கப்படவில்லை. 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் இவ்வழக்கு விபத்து ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அதாவது 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் விபத்து நிகழ்ந்தது என்பது மறுக்கப்படுகிறது என்றும், மோட்டார் இருசக்கர வாகனத்தினை ஓட்டிய மனுதாரரே தவறான திசையில் எதிரே அலட்சியமகவும், கவனக்குறைவாகவும், ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் ஓட்டிச் சென்று 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தி விட்டார் என்றும், 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் சிறந்த முயற்சி எடுத்தும் விபத்தினை தவிர்க்க இயலவில்லை எனவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் தான் மனுதாரர்கள் தங்களுடைய சாட்சியத்தில் 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரே அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தினை ஓட்டி வந்து இந்த மனுதாரர்கள் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தி விட்டார் என ஏற்கத்தக்க வகையிலும் நம்பத்தகுந்த வகையிலும் எடுத்துரைத்துள்ளார்கள். மனுதாரர்களின் சாட்சியத்தினை ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடாது அல்லது நம்பக்கூடாது என்பதற்கு 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்கத்தக்க காரணம் கூறப்படவில்லை. இவ்வழக்கு விபத்து

சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1, 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீதே பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து புலன் விசாரணை அதிகாரியால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை ம.சா.ஆ.8, 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீதே பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணங்களை தொடர்புபடுத்தும் வகையிலே மனுதாரர்களின் சாட்சியமும் அமைந்துள்ளது. அவ்வாறானச் சூழ்நிலையில் தான் 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் சம்பவத்தைக் கண்ணுற்ற சாட்சிகளையோ அல்லது சம்பவத்தோடு தொடர்புடைய சாட்சிகளையோ இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரிக்க தவறிவிட்டார். 2-ம் எதிர்மனுதாரரின் இந்த செயல்படானது மனுதாரர்களின் வழக்கினை ஒப்புக்கொள்ளும் விதமாகவே அமைந்துள்ளது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து மனுதாரர்கள் தரப்பில் ஏற்கத்தக்க சாட்சியம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் தான் விபத்து நிகழ்ந்தது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

7. மோ.வா.வி.கோ.ம.எண்.1197/2023 பிரச்சனை எண்.2 க்கான தீர்வு :-

இவ்வழக்கு விபத்தானது 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் தான் நிகழ்ந்தது என்பது மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டு விட்டதினால் இந்த மனுதாரருக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. விபத்தினால் இந்த மனுதாரருக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு, முதல் முறை 15.05.2023 முதல் 16.05.2023 வரையிலும், 2-வது முறை 16.05.2023 முதல் 21.05.2023 வரையிலும், 3-வது முறை 07.06.2023 முதல் 09.06.2023 வரையிலும் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு தகடு மற்றும் திருகாணிகள் பொருத்தி சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்பது, ம.சா.ஆ.2 விபத்து பதிவேடு, ம.சா.ஆ.3 முதல் ம.சா.ஆ.5 வரையிலான மருத்துவமனை விடுவிப்புக் குறிப்புகள், ம.சா.ஆ.9 நுண்கதிர் படம் ஆகியவற்றினை பரிசீலிக்கும் பொழுது தெரியவருகிறது. மனுதாரருக்கு ஏற்பட்ட எலும்பு முறிவு குறித்து மருத்துவர் கருத்து கூறும் பொழுது ம.சா.ஆ.2-ன் வாயிலாக கொடுங்காயம்

என கருத்து கூறியுள்ளார். எனவே இந்த மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்தின் தன்மையினை அறிந்து கொள்வதற்காக இந்த மனுதாரர் மருத்துவக்குழு முன்பு பரிந்துரைக்கப்பட்டு மருத்துவக்குழு மனுதாரரை பரிசோதனை செய்து மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்தின் தன்மை 37% என நீ.ம.சா.ஆ.2 ஊனச்சான்று வழங்கியுள்ளார்கள். மனுதாரருக்கான ஊனத்திற்கு தோரயமாக இழப்பீடு வழங்குவது குறித்து ***CMA. No.13 of 2025*** - **M.Revanth Kumar – Vs – M/s. Sun -X-Concrete India Priviate Limited and another"** என்ற வழக்கில் நமது மாண்புமிகு உயர்நீதிமன்றம் 10.01.2025-ல் தீர்ப்பு வழங்கும் போது 2022-ம் ஆண்டு விபத்து வழக்கில் தற்போதைய நடைமுறையில் உள்ள சட்டத்தின் படி ஒரு விழுக்காட்டிற்கு ரூ.10,000/- தீர்மானிக்க வேண்டுமென கூறப்பட்டுள்ளது. இந்த வழக்கின் விபத்து 2023-ல் நடந்துள்ளது என்பதினால் ஒரு விழுக்காட்டிற்கு ரூ.10,000/- என தீர்மானித்து 37 விழுக்காட்டிற்கு 37 x 10000 = ரூ.3,70,000/- இழப்பீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்பதினை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் போது இம்மனுதாரருக்கான வயதினை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டும் காயம் காரணமாக மனுதாரருக்கு மிகுந்த வலி மற்றும் துன்பம் ஏற்பட்டிருக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து மனுதாரருக்கான வலி மற்றும் துன்பத்திற்காக ரூ.2,50,000/- இழப்பீடு கிடைக்கத்தக்கதென இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. மனுதாரருக்கு ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக மனுதாரர் உள்நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்ட போதும், பின்னிட்டு காயங்கள் குணமாவதற்கும், எலும்புகள் கூடுவதற்கும் கூடுதல் ஊட்டச்சத்து எடுத்துக்கொள்ள வாய்ப்புள்ளது என முடிவு செய்து கூடுதல் ஊட்டச்சத்திற்காக ரூ.30,000/- இழப்பீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரருக்கு ஏற்பட்ட எலும்பு முறிவினை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் பொழுது அவர் மருத்துவமனையில் உள்நோயாளியாகவும், பின்னிட்டு வெளிப்புற நோயாளியாகவும் சிகிச்சை எடுத்துக் கொண்டதினை பரிசீலனைக்கு எடுத்துக்

கொள்ளும் போது அவர் ஒவ்வொரு முறை மருத்துவமனைக்கு செல்வதற்கும் தனியாக வாகனம் ஏற்பாடு செய்து சென்றிருக்க வாய்ப்புள்ளது என்பதினால் மனுதாரருக்கு கூடுதல் போக்குவரத்துச் செலவினங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து மனுதாருக்கான போக்குவரத்துச் செலவினங்களுக்காக ரூ.10,000/- இழப்பீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரரின் வயது மற்றும் அவருக்கு ஏற்பட்ட எலும்பு முறிவினை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் பொழுது அவர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த காலக்கட்டத்திலும் பின்னிட்டு முழுவதுமாக குணமாகும் வரை ஒரு நபர் உதவியாக இருந்திருக்க வாய்ப்புள்ளது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை என்றும், அவ்வாறு உதவியாளர் செலவினங்களுக்கான இழப்பீடு மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்து உதவியாளருக்கான செலவினங்களுக்காக தோராயமாக ரூ.30,000/- இழப்பீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரரின் வயது மற்றும் அவருக்கு ஏற்பட்ட எலும்பு முறிவினை பரிசீலிக்கும் பொழுது மனுதாரருக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதினால் அவரால் இனிவருங்காலங்களில் முன்புபோல் இயல்பாக நடப்பதற்கும், வாகனங்கள் ஓட்டுவதற்கும், வழக்கமான பணிகளை செய்வதற்கும் சிரமம் ஏற்படும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை என்றும், அதனால் இந்த மனுதாரருக்கு வசதிக்குறைவு ஏற்பட்டுள்ளது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை என முடிவு செய்து மனுதாரருக்கு ஏற்பட்ட வசதிகுறைவிற்காக ரூ.50,000/- இழப்பீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரருக்கு ஏற்பட்ட எலும்பு முறிவினை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் போது அவர் சிகிச்சை எடுத்துக் கொண்ட காலம் மற்றும் முழுமையாக குணமடையும் வரை வேலைக்குச் சென்றிருக்க வாய்ப்பில்லை என முடிவு செய்து அவர் தோராயமாக ஆறு மாதங்கள் வேலைக்குச் சென்றிருக்க வாய்ப்பில்லை என முடிவு செய்து அந்த காலக்கட்டத்திற்கான வருமான இழப்பீடு மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்றும், மனுதாரரின் வயது, உழைக்கும் திறன் மற்றும் விபத்து நடந்த 2023 காலக்கட்டத்திற்கான விலைவாசி உயர்வு மற்றும் கூலி உயர்வு ஆகியவற்றினை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு அவர் மாதம் ரூ.15,000/- சம்பாதிக்க வாய்ப்புள்ளது என முடிவு செய்து ஆறு

மாதங்களுக்கு 6 x 15000 = ரூ.90,000/- வருமான இழப்பீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரருக்கான ஆடைகள் இழப்பிற்காக ரூ.2,000/- இழப்பீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரருக்கான மருத்துவச் செலவினங்களுக்காக ம.சா.ஆ.6 மருத்துவ ரசீதுகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதினால் அதில் கண்ட செலவினங்கள் இந்த மனுதாரருக்கு ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து மனுதாரருக்கான மருத்துவச் செலவினங்களுக்காக ரூ.2,03,336/- கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. மேலே கண்டவாறு மனுதாரருக்கான இழப்பீடுகள் கீழ்கண்டவகையில் பட்டியலிடப்படுகிறது.

1.	மனுதாரருக்கு ஏற்பட்ட உடல் ஊனத்திற்கு தோராயமாக (ஒரு விழுக்காட்டிற்கு ரூ.10000/-) 37 விழுக்காட்டிற்கு 37x10000= ரூ.370000/-	ரூ.	3,70,000/-
2.	மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் துன்பத்திற்கு	ரூ.	2,50,000/-
3.	கூடுதல் ஊட்டச்சத்திற்கு	ரூ.	30,000/-
4.	கூடுதல் போக்குவரத்துச் செலவிற்கு	ரூ.	10,000/-
5.	உதவியாளர் இழப்பீடு	ரூ.	30,000/-
6.	மனுதாரருக்கு ஏற்பட்ட வசதி குறைவிற்கு	ரூ.	50,000/-
7.	ஆறு மாதங்களுக்கான வருமான இழப்பீடு 6 x 15000 = 90,000/-	ரூ.	90,000/-
8.	ஆடைகள் இழப்பிற்கு	ரூ.	2,000/-
9.	மனுதாரருக்கான மருத்துவச் செலவினங்கள்	ரூ.	2,03,336/-
	கூடுதல்	ரூ.	10,35,336/-
	முழுமையாக்கப்பட்ட கூடுதல் தொகை	**ரூ.**	**10,36,000/-**

8. மோ.வா.வி.கோ.ம.எண்.1196/2023 பிரச்சனை எண்.2 க்கான தீர்வு :-

இவ்வழக்கு விபத்தானது 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் தான் நிகழ்ந்தது என்பது மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டு

விட்டதினால் இந்த மனுதாரருக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. விபத்தினால் இந்த மனுதாரருக்கு வலது கால் தொடை மேல் பகுதியில் எலும்பு முறிவு ஏற்பட்டு முதல் முறை 15.05.2023 முதல் 16.05.2023 வரையிலும், 2-வது முறை 16.05.2023 முதல் 21.05.2023 வரையிலும் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு தகடு மற்றும் திருகாணிகள் பொருத்தி சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்பது, ம.சா.ஆ.14 விபத்து பதிவேடு, ம.சா.ஆ.10 மற்றும் ம.சா.ஆ.11 மருத்துவமனை விடுவிப்புக் குறிப்புகள், ம.சா.ஆ.12, மருந்து பரிந்துரைச் சீட்டு ஆகியவற்றினை பரிசீலிக்கும் பொழுது தெரியவருகிறது. மனுதாரருக்கு ஏற்பட்ட எலும்பு முறிவு குறித்து மருத்துவர் கருத்து கூறும் பொழுது ம.சா.ஆ.14-ன் வாயிலாக கொடுங்காயம் என கருத்து கூறியுள்ளார். எனவே இந்த மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்தின் தன்மையினை அறிந்து கொள்வதற்காக இந்த மனுதாரர் மருத்துவக்குழு முன்பு பரிந்துரைக்கப்பட்டு மருத்துவக்குழு மனுதாரரை பரிசோதனை செய்து மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்தின் தன்மை 40% என நீ.ம.சா.ஆ.1 ஊனச்சான்று வழங்கியுள்ளார்கள். மனுதாரருக்கான ஊனத்திற்கு தோரயமாக இழப்பீடு வழங்குவது குறித்து ***CMA. No.13 of 2025*** - **M.Revanth Kumar – Vs – M/s. Sun -X-Concrete India Priviate Limited and another"** என்ற வழக்கில் நமது மாண்புமிகு உயர்நீதிமன்றம் 10.01.2025-ல் தீர்ப்பு வழங்கும் போது 2022-ம் ஆண்டு விபத்து வழக்கில் தற்போதைய நடைமுறையில் உள்ள சட்டத்தின் படி ஒரு விழுக்காட்டிற்கு ரூ.10,000/- தீர்மானிக்க வேண்டுமென கூறப்பட்டுள்ளது. இந்த வழக்கின் விபத்து 2023-ல் நடந்துள்ளது என்பதினால் ஒரு விழுக்காட்டிற்கு ரூ.10,000/- என தீர்மானித்து 40 விழுக்காட்டிற்கு 40 x 10000 = ரூ.4,00,000/- இழப்பீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்பதினை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் போது இம்மனுதாரருக்கான வயதினை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டும் காயம் காரணமாக மனுதாரருக்கு மிகுந்த வலி மற்றும் துன்பம்

ஏற்பட்டிருக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து மனுதாரருக்கான வலி மற்றும் துன்பத்திற்காக ரூ.2,50,000/- இழப்பீடு கிடைக்கத்தக்கதென இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. மனுதாரருக்கு ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக மனுதாரர் உள்நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்ட போதும், பின்னிட்டு காயங்கள் குணமாவதற்கும், எலும்புகள் கூடுவதற்கும் கூடுதல் ஊட்டச்சத்து எடுத்துக்கொள்ள வாய்ப்புள்ளது என முடிவு செய்து கூடுதல் ஊட்டச்சத்திற்காக ரூ.30,000/- இழப்பீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரருக்கு ஏற்பட்ட எலும்பு முறிவினை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் பொழுது அவர் மருத்துவமனையில் உள்நோயாளியாகவும், பின்னிட்டு வெளிப்புற நோயாளியாகவும் சிகிச்சை எடுத்துக் கொண்டதினை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் போது அவர் ஒவ்வொரு முறை மருத்துவமனைக்கு செல்வதற்கும் தனியாக வாகனம் ஏற்பாடு செய்து சென்றிருக்க வாய்ப்புள்ளது என்பதினால் மனுதாரருக்கு கூடுதல் போக்குவரத்துச் செலவினங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து மனுதாருக்கான போக்குவரத்துச் செலவினங்களுக்காக ரூ.10,000/- இழப்பீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரரின் வயது மற்றும் அவருக்கு ஏற்பட்ட எலும்பு முறிவினை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் பொழுது அவர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த காலக்கட்டத்திலும் பின்னிட்டு முழுவதுமாக குணமாகும் வரை ஒரு நபர் உதவியாக இருந்திருக்க வாய்ப்புள்ளது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை என்றும், அவ்வாறு உதவியாளர் செலவினங்களுக்கான இழப்பீடு மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்து உதவியாளருக்கான செலவினங்களுக்காக தோராயமாக ரூ.30,000/- இழப்பீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரரின் வயது மற்றும் அவருக்கு ஏற்பட்ட எலும்பு முறிவினை பரிசீலிக்கும் பொழுது மனுதாரருக்கு வலது கால் தொடை மேல்பகுதியில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதினால் அவரால் இனிவருங்காலங்களில் முன்புபோல் இயல்பாக நடப்பதற்கும், வாகனங்கள் ஓட்டுவதற்கும், வழக்கமான பணிகளை செய்வதற்கும் சிரமம் ஏற்படும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை என்றும், அதனால் இந்த மனுதாரருக்கு

வசதிக்குறைவு ஏற்பட்டுள்ளது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை என முடிவு செய்து மனுதாரருக்கு ஏற்பட்ட வசதிகுறைவிற்காக ரூ.50,000/- இழப்பீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரருக்கு ஏற்பட்ட எலும்பு முறிவினை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் போது அவர் சிகிச்சை எடுத்துக் கொண்ட காலம் மற்றும் முழுமையாக குணமடையும் வரை வேலைக்குச் சென்றிருக்க வாய்ப்பில்லை என முடிவு செய்து அவர் தோராயமாக ஆறு மாதங்கள் வேலைக்குச் சென்றிருக்க வாய்ப்பில்லை என முடிவு செய்து அந்த காலக்கட்டத்திற்கான வருமான இழப்பீடு மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்றும், மனுதாரரின் வயது, உழைக்கும் திறன் மற்றும் விபத்து நடந்த 2023 காலக்கட்டத்திற்கான விலைவாசி உயர்வு மற்றும் கூலி உயர்வு ஆகியவற்றினை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு அவர் மாதம் ரூ.15,000/- சம்பாதிக்க வாய்ப்புள்ளது என முடிவு செய்து ஆறு மாதங்களுக்கு 6 x 15000 = ரூ.90,000/- வருமான இழப்பீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரருக்கான ஆடைகள் இழப்பிற்காக ரூ.2,000/- இழப்பீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரருக்கான மருத்துவச் செலவினங்களுக்காக ம.சா.ஆ.13 மருத்துவ ரசீதுகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதினால் அதில் கண்ட செலவினங்கள் இந்த மனுதாரருக்கு ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து மனுதாரருக்கான மருத்துவச் செலவினங்களுக்காக ரூ.87,761/- கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. மேலே கண்டவாறு மனுதாரருக்கான இழப்பீடுகள் கீழ்கண்டவகையில் பட்டியலிடப்படுகிறது.

1.	மனுதாரருக்கு ஏற்பட்ட உடல் ஊனத்திற்கு தோராயமாக (ஒரு விழுக்காட்டிற்கு ரூ.10000/-) 40 விழுக்காட்டிற்கு 40x10000= ரூ.400000/-	ரூ.	4,00,000/-
2.	மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் துன்பத்திற்கு	ரூ.	2,50,000/-
3.	கூடுதல் ஊட்டச்சத்திற்கு	ரூ.	30,000/-
4.	கூடுதல் போக்குவரத்துச் செலவிற்கு	ரூ.	10,000/-
5.	உதவியாளர் இழப்பீடு	ரூ.	30,000/-

6.	மனுதாரருக்கு ஏற்பட்ட வசதி குறைவிற்கு	ரூ.	50,000/-
7.	ஆறு மாதங்களுக்கான வருமான இழப்பீடு 6 x 15000 = 90,000/-	ரூ.	90,000/-
8.	ஆடைகள் இழப்பிற்கு	ரூ.	2,000/-
9.	மனுதாரருக்கான மருத்துவச் செலவினங்கள்	ரூ.	87,761/-
	கூடுதல்	ரூ.	9,49,761/-
	முழுமையாக்கப்பட்ட கூடுதல் தொகை	**ரூ.**	**9,50,000/-**

9. மோ.வா.வி.கோ.ம.எண்கள்.1197/2023 மற்றும் 1196/2023 – பிரச்சினை எண்.3-க்கான தீர்வு :-

மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவை கொண்டுவரும் பொழுது 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் 2-ம் எதிர்மனுதாரர் வசம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே 2-ம் எதிர்மனுதாரரும் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார் என வாதிடப்பட்டுள்ளது. 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.சா.ஆ.7-ஆக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. அதனை பரிசீலிக்கையில் 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் 2-ம் எதிர்மனுதாரர் வசம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. அதனை பொறுத்து 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்கப்படவில்லை. 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு போதிய ஓட்டுநர் உரிமம் உள்ளதாக மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அவ்வாறானச் சூழ்நிலையில் தான் 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் வேறு காப்பீட்டு விதிமீறல் செய்திருப்பதாக குறிப்பிட்டு எந்த எதிர்வாதமும் எடுத்த வைக்க தவறிவிட்டக் காரணத்தினால் 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் எவ்வித காப்பீட்டு விதிமீறலில் ஈடுபடவில்லை என இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்து மனுதாரருக்கான இழப்பீட்டு தொகையை 2-ம் எதிர்மனுதாரரே செலுத்த வேண்டுமென இந்நீதிமன்றம் இந்த பிரச்சினைக்கு விடை காண்கிறது.

மோ.வா.வி.கோ.எண்.1197/2023

1. முடிவில் மனுதாரரின் மனு பகுதியாக விகிதாச்சார செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையாக **ரூ.10,36,000/-** 2-ம் எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் வழங்கப்படும் நாள் வரை 7.5% சதவீதம் ஆண்டு வட்டி சேர்த்து இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், அதில் மனுதாரரின் தவறுகை காரணமாக மனு தள்ளுபடி செய்யப்பட்ட காலம் ஏதேனும் இருப்பின் அதனை கழித்துக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.
2. மேற்படி இழப்பீட்டு தொகையை, 2-ம் எதிர்மனுதாரர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மஞ்சக்குப்பம் கிளை, கடலூர் VAN ID: SDJCUD1MCOP11972023 IFSC Code : IOBA0001355 ல் NEFT /RTGS mode மூலம் மேற்படி வழக்கின் எண்ணான CNR.No.TNCD01-005454-2023 என்ற எண்ணை குறிப்பிட்டு பதிவு தபால் மூலமாகவும், மேலும் இந்நீதிமன்றத்தின் மின்னஞ்சல் cuddcmcopcourt1@gmail.com மூலமாகவும் தகவல் தெரிவித்து, வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.
3. மேற்படி இழப்பீட்டுத் தொகையில் மனுதாரர் அவருக்குரிய தொகையில் பாதியையும் அவருக்கான முழு இழப்பீட்டு தொகைக்கான வட்டியையும் மற்றும் விகிதாச்சார செலவு தொகையையும் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம் என உத்தரவிடப்படுகிறது. மனுதாரருக்கான பாக்கி இழப்பீட்டு தொகையை ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் மூன்றாண்டு காலத்திற்கு நிரந்தரமாக வைப்பீட்டில் வைக்க உத்தரவிடப்படுகிறது.
4. மனுதாரர் மேற்படி இழப்பீடு தொகையை பெற வங்கி மேலாளர் கையொப்பம் செய்த மனுதாரரின் புகைப்படம் ஒட்டிய வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தினையும், மனுதாரரே மேலொப்பம் செய்த Pancardயும் இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள்

இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் இழப்பீடு தொகையை நீதிமன்ற வைப்பீட்டிலிருந்து பெற அனுமதியற்றவர் என கருதப்படும்.

5. வழக்கறிஞர் கட்டணமாக ரூ.17,360/- என நிர்ணயிக்கப்படுகிறது.
6. மனுதாரர் செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணம் ஏதேனும் இருப்பின் அதனை ஒரு மாதத்திற்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.
7. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு எண்.CRP (PD) No.1343 of 2012 நாள் 02.06.2016ல் M.D.TNSTC, Salem Ltd., Vs. Chinnadurai இந்த வழக்கில் சொல்லப்பட்ட உத்தரவின்படி எதிர்மனுதாரர் TDSக்காக எந்த தொகையும் பிடித்தம் செய்யக்கூடாது என உத்தரவிடப்படுகிறது.

மோ.வா.வி.கோ.எண்.1196/2023

1) முடிவில் மனுதாரரின் மனு பகுதியாக விகிதாச்சார செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையாக **ரூ.9,50,000/-** 2-ம் எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் வழங்கப்படும் நாள் வரை 7.5% சதவீதம் ஆண்டு வட்டி சேர்த்து இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், அதில் மனுதாரரின் தவறுகை காரணமாக மனு தள்ளுபடி செய்யப்பட்ட காலம் ஏதேனும் இருப்பின் அதனை கழித்துக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

2) மேற்படி இழப்பீட்டு தொகையை, 2-ம் எதிர்மனுதாரர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மஞ்சக்குப்பம் கிளை, கடலூர் VAN ID: SDJCUD1MCOP11962023 IFSC Code : IOBA0001355 ல் NEFT /RTGS mode மூலம் மேற்படி வழக்கின் எண்ணான CNR.No.TNCD01-005455-2023 என்ற எண்ணை குறிப்பிட்டு பதிவு தபால் மூலமாகவும், மேலும் இந்நீதிமன்றத்தின் மின்னஞ்சல் cuddcmcopcourt1@gmail.com மூலமாகவும் தகவல் தெரிவித்து, வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

3) மேற்படி இழப்பீட்டுத் தொகையில் மனுதாரர் அவருக்குரிய தொகையில் பாதியையும் அவருக்கான முழு இழப்பீட்டு தொகைக்கான வட்டியையும் மற்றும் விகிதாச்சார செலவு தொகையையும் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம் என உத்தரவிடப்படுகிறது. மனுதாரருக்கான பாக்கி இழப்பீட்டு தொகையை ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் மூன்றாண்டு காலத்திற்கு நிரந்தரமாக வைப்பீட்டில் வைக்க உத்தரவிடப்படுகிறது.

4) மனுதாரர் மேற்படி இழப்பீடு தொகையை பெற வங்கி மேலாளர் கையொப்பம் செய்த மனுதாரரின் புகைப்படம் ஒட்டிய வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தினையும், மனுதாரரே மேலோப்பம் செய்த Pancardயும் இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் இழப்பீடு தொகையை நீதிமன்ற வைப்பீட்டிலிருந்து பெற அனுமதியற்றவர் என கருதப்படும்.

5) வழக்கறிஞர் கட்டணமாக ரூ.16,500/- என நிர்ணயிக்கப்படுகிறது.

6) மனுதாரர் செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணம் ஏதேனும் இருப்பின் அதனை ஒரு மாதத்திற்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

7) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு எண்.CRP (PD) No.1343 of 2012 நாள் 02.06.2016ல் M.D.TNSTC, Salem Ltd., Vs. Chinnadurai இந்த வழக்கில் சொல்லப்பட்ட உத்தரவின்படி எதிர்மனுதாரர் TDSக்காக எந்த தொகையும் பிடித்தம் செய்யக்கூடாது என உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்தில் எழுதப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிரிதி எடுக்கப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ம் நாள் செவ்வாய் கிழமை இந்த உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

V ANANTHAN Digitally signed by V ANANTHAN Date: 2025.11.11 18:50:04 +0530

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாயர்,
சிறப்பு மாவட்ட நீதிபதி எண்.1,
கடலூர்.

Particulars provided as per the Judgment of Hon'ble Madras High Court in M/S Cholamandalam MS Genl Ins.Co.Ltd., - Vs- Mr.Ayyanar, Tr.C.M.P.No.264 to 2020, dated 11.05.2020

மோ.வா.வி.கோ.எண்.1197/2023

1.	(Name and Address of the Claimant) (மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்)	K. Srinivasan, S/o. Kannan (Age 23) residing at : No.229, South Street, Akkaraigori, Cuddalore Port, Cuddalore – 607003.
2.	Name and Address of the Respondents (எதிர்மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்)	1) Kapoor Diesels Garage Pvt. Ltd (rep by its Proprietor) 29/5, Village Nangli Poona, G.T.Karnal Road, New Delhi – 110036. 2) The Divisional Manger, The New India Assurance Co., Ltd., DO, No.1 Bharathi Road, Cuddalore – 607001.
3.	Date of Filing of the Claim Petition (மனுதாக்கல் செய்யப்பட்டநாள்)	02.06.2023
4.	Date of Award (உத்தரவு பகரப்பட்ட நாள்)	11.11.2025
5.	Amount of Award (வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை)	ரூ.10,36,000/- (ரூபாய் பத்து லட்சத்து முப்பத்து ஆறாயிரம் மட்டும்)
6.	Interest Rate Applicable	7.5%
7.	Date from which interest is payable (எந்த நாளிலிருந்து வட்டி வழங்கப்படவேண்டும்)	மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் வட்டி வழங்க வேண்டும்
8.	Costs if any	2-ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலவு தொகையான ரூ.27241/- செலுத்த வேண்டும். ***(Stamp Duty of Rs.9732.50 - 375 = Rs.9357.50/-) The Petitioner shall pay the balance Court fee of Rs.9357.50/- within One Month***

Particulars of costs

For Petitioner		**For Respondent:**	
	Rs.		**Rs.**
Court fee	9732.50		

		Stamp in Vakalath	10.00	Stamp on Vakalath	10.00
		Fee for services of process	13.50		
		Stamp on Exhibits	25.00		
		Writing charge	100.00		
		Advocate fee	17360.00		
		Total	**27241.00**	**Total**	**10.00**
9.	The Mode and manner of deposit of Compensation (இழப்பீட்டுத் தொகையை வைப்பீடு செய்யப்படும் வழிமுறை)	**முடிவாக, இம்மனு கீழ்கண்டவாறு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.** 1) முடிவில் மனுதாரரின் மனு பகுதியாக விகிதாச்சார செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையாக **ரூ.10,36,000/-** 2-ம் எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் வழங்கப்படும் நாள் வரை 7.5% சதவீதம் ஆண்டு வட்டி சேர்த்து இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், அதில் மனுதாரரின் தவறுகை காரணமாக மனு தள்ளுபடி செய்யப்பட்ட காலம் ஏதேனும் இருப்பின் அதனை கழித்துக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது. 2) மேற்படி இழப்பீட்டு தொகையை, 2-ம் எதிர்மனுதாரர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மஞ்சக்குப்பம் கிளை, கடலூர் VAN ID: SDJCUD1MCOP11972023 IFSC Code : IOBA0001355 ல் NEFT /RTGS mode மூலம் மேற்படி வழக்கின் எண்ணான CNR.No.TNCD01-005454-2023 என்ற எண்ணை குறிப்பிட்டு பதிவு தபால் மூலமாகவும், மேலும் இந்நீதிமன்றத்தின் மின்னஞ்சல் cuddcmcopcourt1@gmail.com மூலமாகவும் தகவல் தெரிவித்து, வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. 3) மேற்படி இழப்பீட்டுத் தொகையில் மனுதாரர் அவருக்குரிய தொகையில் பாதியையும் அவருக்கான			

		முழு இழப்பீட்டு தொகைக்கான வட்டியையும் மற்றும் விகிதாச்சார செலவு தொகையையும் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம் என உத்தரவிடப்படுகிறது. மனுதாரருக்கான பாக்கி இழப்பீட்டு தொகையை ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் மூன்றாண்டு காலத்திற்கு நிரந்தரமாக வைப்பீட்டில் வைக்க உத்தரவிடப்படுகிறது. 4) மனுதாரர் மேற்படி இழப்பீடு தொகையை பெற வங்கி மேலாளர் கையொப்பம் செய்த மனுதாரரின் புகைப்படம் ஒட்டிய வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தினையும், மனுதாரரே மேலோப்பம் செய்த Pancardயும் இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் இழப்பீடு தொகையை நீதிமன்ற வைப்பீட்டிலிருந்து பெற அனுமதியற்றவர் என கருதப்படும். 5) வழக்கறிஞர் கட்டணமாக ரூ.17,360/- என நிர்ணயிக்கப்படுகிறது. 6) மனுதாரர் செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணம் ஏதேனும் இருப்பின் அதனை ஒரு மாதத்திற்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. 7) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு எண்.CRP (PD) No.1343 of 2012 நாள் 02.06.2016ல் M.D.TNSTC, Salem Ltd., Vs. Chinnadurai இந்த வழக்கில் சொல்லப்பட்ட உத்தரவின்படி எதிர்மனுதாரர் TDSக்காக எந்த தொகையும் பிடித்தம் செய்யக்கூடாது என உத்தரவிடப்படுகிறது.
10.	The Mode and manner of Disbursement (மேற்படி இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் வழிமுறை)	Through *NEFT / RTGS*
11.	Date of payable Balance Court Fee (பாக்கி நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டிய நாள்)	பாக்கி நீதிமன்றக் கட்டணம் ஏதேனும் இருப்பின் மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும்.

Particulars provided as per the Judgment of Hon'ble Madras High Court in M/S Cholamandalam MS Genl Ins.Co.Ltd., - Vs- Mr.Ayyanar, Tr.C.M.P.No.264 to 2020, dated 11.05.2020

மோ.வா.வி.கோ.எண்.1196/2023

1.	(Name and Address of the Claimant) (மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்)	R. Veera Sanjivi, S/o. Ragupathy, (Age 19) residing at : No.108, South Street, Annavalli, Akkarai Gori, Cuddalore Old Town, Cuddalore – 607003.
2.	Name and Address of the Respondents (எதிர்மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்)	1) Kapoor Diesels Garage Pvt. Ltd (rep by its Proprietor) 29/5, Village Nangli Poona, G.T.Karnal Road, New Delhi – 110036. 2) The Divisional Manger, The New India Assurance Co., Ltd., DO, No.1 Bharathi Road, Cuddalore – 607001.
3.	Date of Filing of the Claim Petition (மனுதாக்கல் செய்யப்பட்டநாள்)	02.06.2023
4.	Date of Award (உத்தரவு பகரப்பட்ட நாள்)	11.11.2025
5.	Amount of Award (வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை)	ரூ.9,50,000/- (ரூபாய் ஒன்பது லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)
6.	Interest Rate Applicable	7.5%
7.	Date from which interest is payable (எந்த நாளிலிருந்து வட்டி வழங்கப்படவேண்டும்)	மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் வட்டி வழங்க வேண்டும்
8.	Costs if any	2-ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலவு தொகையான ரூ.25506/- செலுத்த வேண்டும். ***(Stamp Duty of Rs.8872.50 - 375 = Rs.8497.50/-) The Petitioner shall pay the balance Court fee of Rs.8497.50/- within One Month***

Particulars of costs

For Petitioner		**For Respondent:**	
	Rs.		**Rs.**
Court fee	8872.50		

		Stamp in Vakalath	10.00	Stamp on Vakalath	10.00
		Fee for services of process	13.50		
		Stamp on Exhibits	10.00		
		Writing charge	100.00		
		Advocate fee	16500.00		
		Total	**25506.00**	**Total**	**10.00**
9.	The Mode and manner of deposit of Compensation (இழப்பீட்டுத் தொகையை வைப்பீடு செய்யப்படும் வழிமுறை)	**முடிவாக, இம்மனு கீழ்கண்டவாறு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.** 1) முடிவில் மனுதாரரின் மனு பகுதியாக விகிதாச்சார செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையாக **ரூ.9,50,000/-** 2-ம் எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் வழங்கப்படும் நாள் வரை 7.5% சதவீதம் ஆண்டு வட்டி சேர்த்து இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், அதில் மனுதாரரின் தவறுகை காரணமாக மனு தள்ளுபடி செய்யப்பட்ட காலம் ஏதேனும் இருப்பின் அதனை கழித்துக் கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது. 2) மேற்படி இழப்பீட்டு தொகையை, 2-ம் எதிர்மனுதாரர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மஞ்சக்குப்பம் கிளை, கடலூர் VAN ID: SDJCUD1MCOP11962023 IFSC Code : IOBA0001355 ல் NEFT /RTGS mode மூலம் மேற்படி வழக்கின் எண்ணான CNR.No.TNCD01-005455-2023 என்ற எண்ணை குறிப்பிட்டு பதிவு தபால் மூலமாகவும், மேலும் இந்நீதிமன்றத்தின் மின்னஞ்சல் cuddcmcopcourt1@gmail.com மூலமாகவும் தகவல் தெரிவித்து, வங்கியில் நிரந்தர வைப்பீடு செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. 3) மேற்படி இழப்பீட்டுத் தொகையில் மனுதாரர் அவருக்குரிய தொகையில் பாதியையும் அவருக்கான			

		முழு இழப்பீட்டு தொகைக்கான வட்டியையும் மற்றும் விகிதாச்சார செலவு தொகையையும் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம் என உத்தரவிடப்படுகிறது. மனுதாரருக்கான பாக்கி இழப்பீட்டு தொகையை ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் மூன்றாண்டு காலத்திற்கு நிரந்தரமாக வைப்பீட்டில் வைக்க உத்தரவிடப்படுகிறது. 4) மனுதாரர் மேற்படி இழப்பீடு தொகையை பெற வங்கி மேலாளர் கையொப்பம் செய்த மனுதாரரின் புகைப்படம் ஒட்டிய வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தினையும், மனுதாரரே மேலொப்பம் செய்த Pancardயும் இன்றிலிருந்து ஒருமாத காலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் இழப்பீடு தொகையை நீதிமன்ற வைப்பீட்டிலிருந்து பெற அனுமதியற்றவர் என கருதப்படும். 5) வழக்கறிஞர் கட்டணமாக ரூ.16,500/- என நிர்ணயிக்கப்படுகிறது. 6) மனுதாரர் செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணம் ஏதேனும் இருப்பின் அதனை ஒரு மாதத்திற்குள் இந்நீதிமன்றத்தில் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. 7) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு எண்.CRP (PD) No.1343 of 2012 நாள் 02.06.2016ல் M.D.TNSTC, Salem Ltd., Vs. Chinnadurai இந்த வழக்கில் சொல்லப்பட்ட உத்தரவின்படி எதிர்மனுதாரர் TDSக்காக எந்த தொகையும் பிடித்தம் செய்யக்கூடாது என உத்தரவிடப்படுகிறது.
10.	The Mode and manner of Disbursement (மேற்படி இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் வழிமுறை)	Through *NEFT / RTGS*
11.	Date of payable Balance Court Fee (பாக்கி நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டிய நாள்)	பாக்கி நீதிமன்றக் கட்டணம் ஏதேனும் இருப்பின் மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் :-

ம.சா.1	:	ஸ்ரீநிவாசன் (MCOP 1197/2023)
ம.சா.2	:	வீர சஞ்சீவி(MCOP 1196/2023)

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-

ம.சா.ஆ.1	:	வழக்கு விபத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ஒளிப்பட நகல்
ம.சா.ஆ.2	:	மனுதாரர் ஸ்ரீநிவாசன் என்பவருக்கான விபத்து பதிவேடு ஒளிப்பட நகல்
ம.சா.ஆ.3	:	மனுதாரர் ஸ்ரீநிவாசன் என்பவருக்கு கடலூர் அரசு தலைமை மருத்துவமனை வழங்கிய விடுவிப்புக் குறிப்பு அசல்
ம.சா.ஆ.4	:	மனுதாரர் ஸ்ரீநிவாசன் என்பவருக்கு Be Well மருத்துவமனை வழங்கிய விடுவிப்புக் குறிப்பு ஒளிப்பட நகல்
ம.சா.ஆ.5	:	மனுதாரர் ஸ்ரீநிவாசன் என்பவருக்கு Be Well மருத்துவமனை வழங்கிய விடுவிப்புக் குறிப்பு ஒளிப்பட நகல்
ம.சா.ஆ.6	:	மனுதாரர் ஸ்ரீநிவாசன் என்பவர் பெயருக்கு ஏற்பட்ட மருத்துவ ரசீதுகள் (ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது)
ம.சா.ஆ.7	:	1-ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஒளிப்பட நகல்
ம.சா.ஆ.8	:	வழக்கு விபத்து சம்மந்தமாக புலன் விசாரணை அதிகாரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கை ஒளிப்பட நகல்
ம.சா.ஆ.9	:	மனுதாரர் ஸ்ரீநிவாசன் என்பவருக்கான நுண்கதிர் படம்
ம.சா.ஆ.10	:	மனுதாரர் வீர சஞ்சீவி என்பவருக்கு கடலூர் அரசு தலைமை மருத்துவமனை வழங்கிய விடுவிப்புக் குறிப்பு அசல்

ம.சா.ஆ.11 : மனுதாரர் வீர சஞ்சீவி என்பவருக்கு Be Well மருத்துவமனை வழங்கிய விடுவிப்புக் குறிப்பு ஒளிப்பட நகல்

ம.சா.ஆ.12 : மனுதாரருக்கு மருத்துவர் வழங்கிய மருந்து பரிந்துரைச் சீட்டு

ம.சா.ஆ.13 : மனுதாரர் வீர சஞ்சீவி என்பவர் பெயருக்கு ஏற்பட்ட மருத்துவ ரசீதுகள் (ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது)

ம.சா.ஆ.14 : மனுதாரர் வீர சஞ்சீவி என்பவருக்கான விபத்து பதிவேடு ஒளிப்பட நகல்

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :- இல்லை

நீதிமன்ற சான்றாவணங்கள் :-

நீ.ம.சா.ஆ.1 : MCOP 1196/223-ல் கண்ட மனுதாரருக்கு மருத்துவக் குழுவினரால் வழங்கப்பட்ட உடல் ஊனத்திற்கான சான்று

நீ.ம.சா.ஆ.2 : MCOP 1197/2023-ல் கண்ட மனுதாரருக்கு மருத்துவக் குழுவினரால் வழங்கப்பட்ட உடல் ஊனத்திற்கான சான்று

V ANANTHAN
Digitally signed by V ANANTHAN
Date: 2025.11.11 18:50:19 +0530

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாயர்,
சிறப்பு மாவட்ட நீதிபதி எண்.1,
கடலூர்.